விலை ரூபா : 2/-

# நாணயம்

නාණයම්        Naanayam

இலங்கை சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்க சம்மேளன வெளியீடு
FEDERATION OF THRIFT AND CREDIT CO-OPERATIVE SOCIETIES LTD. IN SRI LANKA

மலர் / VOL. 3 ★ ஆவணி – புரட்டாதி AUGUST – SEPTEMBER 1989 ★ இதழ் / NO 3

University of Jaffna Library, Periodicals Division, Received 1989-9-12

# வடக்கு-கிழக்கு மாகாண சிகசு மாவட்ட சமாசங்களுக்கு கூடுதலான உதவி!

**‘இலங்கை சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனம் வட, கிழக்கு மாகாணங்களிலுள்ள சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்க மாவட்ட சமாசங்களின் நிதி முகாமைத்துவ திட்டம், புனர்வாழ்வு நடவடிக்கைகள் போன்றவற்றிற்கு கூடுதலான நிதி வசதிகளை செய்து வருகின்றது.’**

வடக்கு கிழக்கு மாகாண சிகசு மாவட்ட சமாசங்களின் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்காக இலங்கை சிகசு சம்மேளனம் ஜூலை மாதம் வரை ரூபா 110,28,000/- (ஒரு கோடியே பத்து லட்சத்து இருபத்தெட்டாயிரம் ரூபாவை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, கல்முனை மாவட்டங்களுக்கு குறைந்த வட்டி வீதத்தில் வழங்கி உள்ளது. இதே வேளை நிதி முகாமைத்துவ அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ரூபா இரண்டுலட்சத்து ஐம்பதாயிரத்து அறுநூறு (250600/-) வை மாவட்ட சமாசங்களுக்கு வழங்கியுள்ளது. நிதிமுகாமைத்துவ அபிவிருத்திக்காக சமாசங்களுக்கு வழங்கப்பட்ட கடன் (நிதி உத்தியோகத்தர், உதவிச் செயலாளர்) வட்டி இல்லாக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

புனர்வாழ்வுத் திட்டத்தில் நெல் வேளாண்மை, உப உணவு உற்பத்தி, மிருக வேளாண்மை மற்றும் சுய தொழில் முயற்சி போன்ற வருமானத்தை அதிகரிப்பதற்கான செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட கடன் பற்றிய விபரம் பின்வருமாறு:-

யாழ்ப்பாணம் மாவட்டம்:- ரூபா 70 லட்சம்.

முல்லைத்தீவு மாவட்டம்:- ரூபா 15 லட்சம்.

கிளிநொச்சி மாவட்டம்:- ரூபா 15 லட்சம்.

கல்முனை மாவட்டம்:- ரூபா 5½ லட்சம்.

நிதி முகாமைத்துவ அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மாவட்ட சமாசங்களில் நிதி உத்தியோகத்தர்கள், உதவிச் செயலாளர்களை நியமிப்பதற்கென ரூபா 250600/-வை ஜூலை 1989 வரை வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை இத்திட்டத்தின் கீழ் மாவட்ட சமாசங்களுக்கு மோட்டார் சைக்கிள்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

இலங்கை சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனம் அங்கத்துவ சங்கங்களது அபிவிருத்தி முன்னேற்ற நடவடிக்கைகள் கருதி

(8ஆம் பக்கம் பார்க்க)

## வாசகர்கட்கு!

அன்புள்ள வாசகர்களே! வைகாசி 1989 முதல் நாணயம் பத்திரிகை எமது சிகசு பிரதேச நிலையத்திலிருந்து வெளிவருகிறது. உங்களது படைப்புக்கள், பத்திரிகை சம்பந்தமான கருத்துக்களை சிகசு பிரதேச நிலையத்திற்கு அனுப்பி வைக்கும்படி அன்பாக கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி

முகவரி:-

ஆசிரியர் – நாணயம்
சி.க.கூ. – பிரதேச நிலையம்
இல 6, கண்டி வீதி,
பரந்தன்.

## ஆசிய கடனுதவு சமாசத் தலைவராக திரு. கிரிவந்தெனிய தெரிவு!

ஆசிய கடனுதவு சமாசத்தின் ACCU புதிய தலைவராக இலங்கை சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களின் சம்மேளன கௌரவ தலைவர் திரு. பீ. ஏ. கிரிவந்தெனிய தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஆசிய கடனுதவு சமாசத்தின் பொதுச்சபைக் கூட்டம் கடந்த ஜூன் மாதம் 16-25ம் திகதிகளில் தாய்லாந்தில் நடைபெற்றது. இவ் அமைப்பில் இலங்கையின் சார்பில் கலந்து கொண்டு பொருளாளர் / செயலாவர் பதவி வகித்து வந்த திரு. பீ. ஏ. கிரிவந்தெனிய அவர்கள் இம்முறை ஆசிய கடனுதவு சமாச தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார் 10 நாட்கள் இடம்பெற்ற பொதுக்கூட்டம், கருத்தரங்கு ஆய்வு நிகழ்ச்சிகளில் “2000 ஆண்டில் கூட்டுறவு” என்ற விடயம் முக்கிய நிகழ்வாக இடம்பெற்றதுடன் இது சம்பந்தமான திட்டமிடல், செயற்படுத்தல் விடயங்கள் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட திரு. பீ. ஏ. கிரிவந்தெனிய அவர்கள்



தலைமையில் ஆய்வு செய்யப்பட்டன. பொதுக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் விபரம் பின்வரு

(8ம் பக்கம் பார்க்க)

சிக்கன வாழ்வே சிறந்த வாழ்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாணயம்

## எழுச்சிக்கான அறிகுறிகள்

ஓர் இயக்கம் தனது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு முயற்சிக்கின்றவேளை ஒரு முறை கட்டியெழுப்பப்பட்ட அமைப்பு முறை அதன் ஆகக்கூடிய பெறுபேறுகளை அளித்ததன் பின்னர், காலத்திற்கு உதவாததாக மாத்திரமன்றி, அபிவிருத்திக்குத் தடை உண்டாக்குவதாகவும் மாறுபடும்.

ஒரு முறை பெரும் அபிவிருத்திக்கு ஏதுவாக விருந்த அமைப்புமுறை வேறு ஒரு சந்தர்ப்பத்தில், அபிவிருத்திக்கு அப்பால் நாம் கருதும் முன்னேற்றத்தை அடைவதிற் தடையாகவும் திரிவுபடும். அவ்வகையான நிகழ்வுகள் நாட்டின் அரச முறையையும் அதேபோன்று இயக்கத்தின் அமைப்பு முறையையும் பாதிக்கும் என்பதில் சந்தேகமில்லை

அப்படிப்பட்ட ஒரு பிரிவு சிகசு இயக்கம் சாாபாகவும் பொருத்தமாகவே அமையும்.

இன்று சிகசு சங்க இயக்கம் அப்படிப்பட்ட சிக்கல்களை உரியவாறு அடையாளம் கண்டு கொண்டுள்ளது. அது மட்டுமின்றி தேசிய அமைப்புக்குள்கூட அப்படிப்பட்ட ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான புத்திசாலித்தனமான நட வடிக்கைகளையும் எடுப்பதற்கு முன்வந்துள்ளது.

அன்று நாடு பூராவிலும் இருந்த ஆரம்ப சங்கங்களின் சிதறியிருந்த தன்மையினைத் தவிர்த்து, மாவட்ட மட்டத்தில் இணைத்தமை பெறுபேறு மிக்கதாக அமைந்தது. சிகசு சங்கங்களைத் தேசிய மட்டத்தில் ஒன்று படுத்துவதற்கும் தனியுயர் நிலையை அமைப்பதற்கும் அத்திட்டம் பெருந்துணையாக அமைந்தது. சிகசு இயக்கம் ஓரிடத்தில் தேங்கி நிற்கின்ற ஓர் அமைப்பல்ல; நாளைய நாள் பற்றிய நம்பிக்கை கொண்டுள்ள ஓர் இயக்கமாகும். ஆகவே நாம் ஏற்கனவே நடத்தைக்கு இணங்க புது முன்னேற்றத்தின் பொருட்டு, புது அமைப்பொன்றை கட்டியெழுப்புவதற்கு மிகவும் காலத்திற்கு உகந்ததாகும்.

இதன்படி 27 மாவட்டங்களிலும் தலைமைத்துவம் மிகவும் பரவலடைந்து 280 அரசாங்க அதிபர் பிரிவுகள் வரை பிரிந்து செல்லும் ஒரு தலைமைத்துவம் அமைந்துவிடும். சிறு அலகுகளின் ஊடாகப் பரவலாகின்ற அமைப்பு முறை ஆரம்ப மட்டத்துடன் மிகவும் நெருங்குவதன் வாயிலாக பல அபிவிருத்தித் தடைகள் நீங்கி விடும். இற்றை வரை மாவட்ட சமாசங்கள்வரை மட்டுப்பட்டிருந்த அதிகாரமும் சக்தியும் இவ்வாறு விடுவிக்கப்படுவதன் மூலம் முழு இயக்கத்திற்குள்ளும் ஊக்கமிகு எழுச்சியைக் காண முடியும்.

பிராந்திய மட்டத்திலான தலைமைத்துவத்தின் வாயிலாக ஒவ்வொரு பிராந்தியத்தின் சிக்கல்களை மிகத்திறம்படவும் அவ்வேளையிலும் அடையாளம் காணலாம். மிகவும் நெருங்கிய தீர்வுகளை வழங்குவதற்கும் ஆரம்பச் சங்கங்களுடன் நெருக்கமாகப் பணியாற்றுவதற்கும் உறுதுணையாக அமையும்.

புது அமைப்பு முறையானது முழு இயக்கத்திற்குள்ளும் புத்தெழுச்சியை ஏற்படுத்துவதற்கு வழி வகுக்கும்.

# பொருளாளர்கட்கான பயிற்சி வகுப்பு

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட சங்கங்களின் பொருளாளர்கட்கான பயிற்சி வகுப்பொன்று கிளிநொச்சி மாவட்டசமாசத்தில் வைகாசி பதினேழாம் திகதி நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் திரு. பொ. தர்மலிங்கம் தலைமையில் நடைபெற்ற பயிற்சி வகுப்பில் "சிகசு கணக்கு நடைமுறை பற்றிய விளக்கங்கள்" கூட்டுறவு பரிசோதகர்களான திருவாளர்கள்: கே. ஸ்ரீஸ்கந்தராஜா, கா. பரநிருபாசிங்கம், அவர்களால் வழங்கப்பட்டது.

இருபது சங்கங்களைச் சேர்ந்த முப்பதுக்கும் மேற்பட்ட பயிற்சியாளர்கள் கலந்து கொண்ட இவ்வகுப்பில் விசேட விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. எஸ். தணிகாசலம், சிகசு பிரதேச நிலைய பணிப்பாளர் திரு. எஸ். இராஜரெட்ணம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

– பிரசன்னா –

## யாழ். மாவட்ட சமாச உதவிச் செயலாளர்கட்கான — பயிற்சி வகுப்பு —

யாழ்ப்பாண மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களின் சமாச உதவிச் செயலாளர்கட்கான பயிற்சி வகுப்பு வைகாசி மாத முற்பகுதியில் இலங்கை சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்க பிரதேச நிலையத்தில் நடைபெற்றது.

மூன்று நாட்கள் நடைபெற்ற இப் பயிற்சி வகுப்பில் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கான உதவிச் செயலாளரைத் தவிர்ந்த ஏனைய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகட்கான உதவிச் செயலாளர்கள் கலந்து கொண்டனர். சிகசு பிரதேச நிலையப் பணிப்பாளரது தலைமையில் ஆரம்பமான இப் பயிற்சி வகுப்பில் பிரதேச நிலைய உபதலைவர் திரு. அ. சி. முருகேசு விசேட விரிவுரையாளராக கலந்து கொண்டார்.

உதவி அரசாங்க அதிபர் பிரிவு வங்கி நடைமுறைகள், கடன் உத்தரவாத சேமிப்பு பாதுகாப்பு திட்டம், சிகசு சங்க, சமாச நடைமுறை விதி, துணைவிதி பொது சனத் தொடர்பு போன்ற விடயங்கள் பற்றிய விரிவுரைகளும் கலந்துரையாடல்களும் இப் பயிற்சி வகுப்பின் முக்கிய விடயங்களாயிருந்தன. கலந்துரையாடலுக்கு தலைவியாகவும் செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்ட செல்வி மாதங்கி லோகநாதனும், செல்வன் எஸ். சிவநேசனும் கலந்துரையாடலை நெறிப்படுத்தினர்.

## வேலையற்ற யுவதிகட்கு தையல் இயந்திரம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கத்தில் அங்கத்தவராயிருக்கும் வேலையற்றிருக்கும் யுவதிகட்கு கடனடிப்படையில் தையல் இயந்திரங்களை வழங்குவதற்கான முயற்சிகளை முல்லைத்தீவு மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களின் சமாசம் எடுத்து வருகின்றது.

தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தைப் பற்றி "நாணயத்திற்கு" விளக்கிய மாவட்ட சமாசத் தலைவர் திரு. எஸ். சிவானந்தம் அங்கத்தவர்களுக்கு பணஉதவி செய்வதை விட பொருட்களை வாங்கிக் கொடுப்பதன் மூலம் நல்ல விளைவுகளைப் பெறலாம். உதாரணமாக கடந்த காலங்களில் மீன் பிடியாளர்களுக்கு மீன்பிடி உபகரணங்களைப் பெற்றுக்கொடுத்தோம். அவ் உபகரணங்களைக் கொண்டு அங்கத்தவர்கள் தமது தொழிலை நல்ல முறையில் செய்து வருமானத்தைப் பெறக்கூடியதாயிருந்தது. நாட்டு நிலைமை சீராக இருந்திருக்குமாயின் மேற்படி திட்டம் நூற்றுக்குநூறு வீதமான பயனைத் தந்திருக்கும்.

தையல் இயந்திரக் கடன் திட்டம் பற்றி குறிப்பிட்ட மாவட்ட சமாச செயலாளர் திரு. என். திருநாமம் அவர்கள் இலங்கை சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனத்தால் புனர்வாழ்வுத் திட்டத்தின்கீழ் சுயதொழில்முயற்சிக்கு வழங்கப்பட்ட கடன் தொகையைக்கொண்டு தொழிலற்று இருக்கும் யுவதிகட்கு நீண்டகால தவணையில் தையல் இயந்திரங்களை வழங்குவதற்கு சமாசம் தீர்மானித்து இருப்பதாகவும் முதற்கட்டமாக 50 (ஐம்பது) தையல் இயந்திரங்கள் வழங்கப்படும் என்றும் பின்னர் படிப்படியாக அங்கத்தவர் தேவை அறிந்து வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் செயற்படுத்தப்படுமெனவும் தெரிவித்தார்.

— நாணயம் —

இல. 06, கண்டி வீதி,
பரந்தன்.

செய்திப்பத்திரிகை : "நாணயம்"

ஆசிரியர் :
திரு. எஸ். ராஜரட்ணம் பீ. ஏ.

வெளியீடு :
சி. க. கூ. ச. சம்மேளனம்

பத்திரிகைக் குழு :
திரு. எஸ். ஞானப்பிரகாசம்
செல்வி. ரஜனி முத்துசாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அடுத்த இதழில்
10ம் இல. குறுக்கெழுத்துப்
போட்டி வெளிவரும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல 8 இல் பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிச

1வது பரிசு:- செல்வி. ரீ. கலைச்செல்
சண்முகா சிககூ சங்கம்
கரடித்தோட்டம்,
காரைதீவு.

2வது பரிசு:- கந்தையா சியாமளா
காட்டுவிநாயகர் சிககூ சங்கம்
முள்ளியவளை,
முல்லைத்தீவு.

3வது பரிசு:- றமீசா செய்யது
சின்ன புங்கன்தாழ்வு
உயிலங்குளம்,
மன்னார்.

## உங்களுக்குத் தெரியுமா?

1. உலகின் மிக நீளமான புகையிரதப் பாதை
2. ஈரானின் பழைய பெயர்?
3. U.S காங்கிரஸ் நூலகம் எதற்கு புகழ்பெற்றது.
4. ஐ.நா தினமாக உலகநாடுகள் எப்போது அனுஷ்டிக்கின்றது.
5. சர்வதேச அணுசக்தி நிலையத்தின் தலைமை காரியாலயம் எங்கே உள்ளது?
6. W.H.O என்றால் என்ன?
7. ஞாயிற்று தொகுதியின் மிகப்பெரிய கோள்
8. கேத்திர கணிதத்தின் தந்தை யார்?
9. சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் ஆரம்பமாகிய காலம்?
10. மிகவும் உயரமான பறவை?

விடை-

1. ரிரான்ஸ் சைபீரியன் புகையிரதப் பாதை
2. பாரசீகம்
3. இது உலகின் மிகப்பாரிய நூலகம்.
4. அக்டோபர் 24ம் திகதி
5. வியன்னா
6. உலக சுகாதார ஸ்தாபனம்.
7. வியாழன்
8. பைதகரஸ்
9. 1919
10. தீக்கோழி

செல்வி பொ. அமுதினி
விவேகானந்த மகாவித்தியாலயம்
கொழும்பு.

## வவுனியா மாவட்ட சமாசத்திற்கு ரூ. 2,000,000/-

*வவுனியா மாவட்டத்தின் 41 சங்கங்களைச் சார்ந்த 887 நன்மை பெறுபவர்கட்கு நவம்பரில் ரூ 1000,000 உம் மீண்டும் டிசம்பரில் ரூ 1000000ம் ஆக 2000000 15% வட்டிக்கு ஆறு மாத காலத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

## கடன் பிரிவிலிருந்து

*கல்லோய மிட்டியாவத்த குறைந்த வருமானம் பெறுகின்ற சிககூ சங்க அங்கத்தவர்களின் சமூக அபிவிருத்தியை உயர்த்தும் பொருட்டான நெறித்திட்டக் கடன் முறையின் கீழ் ரூ358,000 வை 6%வட்டிக்கு ஆறு மாத காலத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளது. இதனால் நன்மை பெறுவோர் 156 பேராவர்.

*சிறிய விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கும் நெறித்திட்டம் II இன் கீழ் 15% வட்டிக்கு கல்லோயா மிட்டியாவத்தைக்கு ரூபா 550875 க்கான தொகை விடுவிக்கப்பட்டுள்ளது. சங்கங்களின் எண்ணிக்கை 17 ஆகும். நன்மை பெறுவோர் 717 ஆகும்.

*கிளிநொச்சி மாவட்ட சிககூ சமாசத்திற்கு ரூ 142000 வழங்கப்பட்டுள்ளது. இதில் ரூ 50,000 ரூபா மாவட்ட வங்கிப் பணிகளுக்காகவும் 92,000 ரூபா குறைந்த வருமானம் பெறும் சிககூ சங்க அங்கத்துவ பொருளாதார சக்தியை மேம்படுத்துவதற்காகவும் 6% வட்டிக்கு வழங்கப்பட்டுள்ளது. ஒரு சங்கத்தின் 46 பேருக்கு வழங்கக் கூடியதாக மாதாந்த தவணைப் பணமாக அறவிட்டுக் கொள்ளப்படும் நிபந்தனையின் பேரில் இத் தொகை அளிக்கப்பட்டுள்ளது.

## குளியாப்பிட்டிக்கு ரூ. 98,000/-

*குளியாப்பிட்டிய சிககூ சமாசத்திற்கு 6% வட்டிக்கு ரூ 98,000 வழங்கப்பட்டுள்ளது. இதன் நோக்கம் குறைந்த வருமானத்தைப் பெறுகின்ற அங்கத்தவர்களின் பொருளாதார விருத்திக்கான நெறித்திட்டங்களை ஆரம்பிப்பதாகும். ஆறு சங்கங்களைச் சேர்ந்த 49 நன்மை பெறுபவர்கட்கு வழங்கப்பட்டுள்ள இக்கடனை ஓராண்டுக்குள் திருப்பிச் செலுத்த வேண்டும்.

## பதுளை விவசாய அபிவிருத்தி

*விவசாய பணிகளுக்காக அதாவது உருளைக்கிழங்கு மற்றும் காய்கறிச் செய்கை, கோழி வளர்ப்பு என்பவற்றிற்காக பதுளை மாவட்ட சிககூ சமாசத்திற்கு ரூ855 000 15% வட்டிக்கு சங்கங்களைச் சார்ந்த 281 அங்ககத்தவர்கட்கு வழங்கப்பட்டுள்ளது.

## நுவரேலியாவுக்கு ஒரு கட்டடம்

*நுவரெலியா மாவட்ட அலுவலக கட்டடத்திற்காக ரூபா 5,00000 ஐந்து லட்சம் 15% வட்டிக்கு 5ஆண்டு காலத்தில் திருப்பிச் செலுத்தும் நிபந்தனையில் வழங்கப்பட்டுள்ளது

## மாணவர் சங்கம்

| | | |
|---|---|---|
| 51. | செ. தனஞ்செயன் | மு/திரு முறிகண்டி இந்து வித்தியாலயம், முல்லைத்தீவு. |
| 52. | முகமது சலீம் | எருக்கலம்பிட்டி ம: ம. வித்தியாலயம். மன்னார். |
| 53. | றமீசா செய்யது | மன்/முருங்கன் ம. வித்தியாலயம், மன்னார். |
| 54. | வை. விநாயக தாஸ் | கிளி/பரந்தன் இந்து மகாவித்தியாலயம், கிளிநொச்சி. |
| 55. | க. புஸ்பகாந்தி | வித்தியானந்தா கல்லூரி, முல்லைத்தீவு. |
| 56. | த. வனஷா. | மு/மல்லாவி ம. வித்தியாலயம் முல்லைத்தீவு. |


## 'நாணயம்' உங்கள் வீட்டுக்கு!

நாணயம் பத்திரிகையை உங்கள் வீட்டுக்குப் பெற்றுப் படிக்க சந்தாதாரராகுங்கள்.

6 மாதம் — 12/-
1 வருடம் — 24/-

தொடர்புகட்கு:
பத்திராதிபர்- நாணயம்,
சி. க. கூ. பிரதேச நிலையம்.
இல. 6, கண்டி வீதி,
பரந்தன்.

பெயர்: ..........................................

முகவரி: ..........................................

..........................................

மாவட்டம்: ..........................................

இத்துடன் 6மாத/ 1 வருட சந்தாவாக ரூபா .................. அனுப்பி வைத்துள்ளேன்.

திகதி கையொப்பம்


கூப்பன்

## மாணவர் சங்கம்

பெயர் :- ..........................................

முகவரி :- ..........................................

பிறந்த திகதி:- .................... வகுப்பு :- ........

பாடசாலை :- ..........................................

மாவட்டம் :- ..........................................

கிராமத்திலுள்ள சி. க. கூ. சங்கத்தின் பெயர் :- ............

மேலே தரப்பட்ட விபரங்கள் சரியானவை. நான் இச்சங்கத்தில் சேர விரும்புகிறேன்.

..........................
கையொப்பம்

### மாணவர் சங்கம்

இன்று மாணவர் மத்தியிலே உள்ள திறமைகளை வெளிக் கொணர்வதற்கு மாத்திரம் மாணவர் சங்கம் என்ற நிலையை மாற்றி மாணவர்கள் கல்வி கற்கும் காலத்திலேயே சிக்கனத்தை கையாண்டு, சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்திக்கொடுக்கவும் மாணவர் சங்கங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

இத்தகைய மாணவர் சங்க அமைப்பொன்றை அகில இலங்கை ரீதியாக அமைத்து அவர்கள் மத்தியிலே உள்ள பல்வேறு திறமைகளை வெளிப்படுத்தவும் சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்தவும் ''நாணயம்'' தீர்மானித்துள்ளது.

இச்சங்கத்தில் 18 வயதுக்கு குறைந்த மாணவர்கள் சேர்ந்து கொள்ளலாம். சேர விரும்புவோர் மாணவர் சங்க விண்ணப்ப கூப்பனை நிரப்பி ஆசிரியருக்கு அனுப்பி வைக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய புள்ளிவிபரத் தரவுகளும் எதிர்கால இலக்குகளும்

ஒரு சிககூ சங்கம், வர்த்தக உலகினை தொழில் நுட்பவியலையும் உண்மையான தன்மைகளையும் ஒன்றிணைக்கின்றது. இவ்விளக்கம் வெற்றி பெறும் பொருட்டு இருகாரணிகளான தொழில் நுட்பவியலும் உண்மையான தன்மையும் சமமாக அமைய வேண்டும். புள்ளி விபரம் என்பது சிறந்த வர்த்தகப் பயன்பாடுகளின் அடிப்படையாக அமைவதுடன், தரவு அல்லது புள்ளி விபரக் த்கவல்களைத் திரட்டுதல் சொல் விளக்கத்திற்கு உதவியாக அமைகின்ற ஓர் உபகரணம் என விபரிக்கலாம்.

திட்டமிடல், சந்தைப் படுத்துதல், கடன் வளக்கம், சாத்தியம், செயற்றிறன் என்பவற்றைக் கணித்தல் ஆகிய பல்வேறு சநதர்ப்பங்களில புள்ளி விபரங்கள் பயன்படுகின்றன. சர்வதேச சிககூ சங்கத்திட்டத்தின் சிறந்த நிலைப்பாடு நமபிக்கையான புள்ளி விபரங்களின் அடிப்படையிலேயே அமைகின்றது.

உண்மையில் புள்ளி விபரங்களைத் திரட்டுவதறகாக சிககூ சங்கங்கள் மாவட்ட சமாசத்திற்கும், மாவட்ட சமாசம் சம்மேளனத்திற்கும், சம்மேளனம் சர்வதேச சபைக்கும் உண்மையான புள்ளி விபரங்களை சமர்ப்பித்தல் அவசியமானதாகும்.

பிரதானமாக சிககூ சங்கங்களின் இயல்பு தொடர்பான பிரச்சினைகளுக்கும் பதிலளிப்பதற்காகவும் செழிப்புக்காகவும் இப்பிரச்சினைகளுக்குப் பதிலளித்தல் வேண்டும். சிககூ சங்கங்கள், சிககூ சங்கத்திட்டம் ஆகிய இரு பிரிவுகள் தொடர்பாக எழுப்பப்படக் கூடிய பல பிரதான பிரச்சினைகள் உண்டு.

* அங்கத்தவர்கள் யார்.
* அவர்களது வருமானத்தின் அளவு
* வயது, தொழில், கல்வி, பால் என்பனவும் அங்கத்தவரல்லாதவர்களுடன் ஒப்பிடும் பொழுது அவர்களது நிலை எவ்வாறு என்பதும்.
* எந்த வகையான சிககூ சங்கம், அளவு, பொதுப் பிணைப்புகள்.
* அங்கத்தவர்கட்கும் எவ்வாறு சேவை செய்வது.
* முன்வைக்கின்ற சேமிப்புக் கணக்கின் இனம் யாது.
* வழங்கப்படுகின்ற கடனின் இனம் யாது % கடனைச் செலுத்தாமல் கடமையில் தவறியவர்களின் வீதம் என்ன?
* வழி நடத்தப்படும் வீதம், மூலதன உள்ளீடுகள், சேமிப்புகள், திரட்டுதல், பங்கீடு இலாபம், ஒதுக்கங்கள் என்பனவும் அவற்றின் திருப்பங்கள் (செல் திசைகள்) யாவை?
* இதர நிதி நிறுவனங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது சிககூ சங்கங்கள் எவ்வாறு விருத்தியடைகின்றன?
* சந்தையிலுள்ள பங்குகள் எத்தனை?
* சிககூ சங்கங்கள், சம்மேளனம் வருடாந்த மகாநாடுகள் என்பன பாதுகாப்பாகவும், சிறப்பாகவும் செயற்பட்டு வருகின்றனவா? அவை நிதித் துறையில் தன்னிறைவு பெற்றுள்ளனவா?

ஆகிய விடயங்கள் இவற்றுள் முதன்மையாக அமைகின்றன.

சிககூ சங்கமொன்றில் இருக்கவேண்டிய அடிப்படை இயல்பு யாதெனில் அதன் அங்கத்தவர்களுக்குச் சேவை செய்வதும், இலக்குகளை நிறைவு பெறச் செய்வதற்காகத் தேவைப்படுகின்றது. எச்சேவை எனத் தீர்மானிப்பதுமாகும். சங்க விருத்தி தொடர்பான அறிக்கை வைத்துக் கொள்வதன் மூலம் சிககூ சங்கம் அங்கத்தவர்கட்கு எவ்வளவு சேவை செய்துள்ளது என்பதை மதிப்பீடு செய்வதற்கு முடியுமாக இருக்கும். வெளிவாரித் தரவுகள், உள்ளகத் தரவுகள் ஆகிய இரு பிரதான பகுதிகளின் கீழ் புள்ளி விவரத திரட்டுப் பணிகள செய்யப்படுகினறன. நிதிக் கூற்றுக்கள் கணககுப் பதிவுகள மற்றும அடிப்படை ஆதாரங்கள என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு உள்ளதாகத் தரவுகள திரட்டப்பட்டன.

**தயாரிப்பு : ஆர். எம். விஜேரத்ன**
**தமிழில் : செல்வி எம். எம். ரஜனி**

### சிககூ சங்க அங்கத்துவ நிதி தொடர்பான தரவுகள்

அங்கத்துவ விளக்கத்திற்காக, முக்கிய உள்ளகத் தரவுகள், சிககூ சஙக அங்கத்துவத் தரவுகள், அங்கத்துவப் பதிவேடுகள், சமூகத் தரவுகள் வழிகாட்டற் புள்ளி விவரங்கள் என்பவற்றின் கீழ் தரவுகளைத் திரட்டிக் கொள்ள முடியும்.

சிககூ சங்க நிதித் தரவுகள் நிதி விளக்கத்தை அளிப்பதற்கு மிகவும் முக்கியமானவையாக அமைகின்றன. இதன் கீழ் நிதி விளக்கத்தைக் தெளிவுபடுத்துகின்ற, தரவுகளைத் தேடிக் கொண்டு நிதி விளக்கத்தில் தரவுகளை திருத்திச் செல்கின்ற (திருப்பங்) களை மதிப்பீடு செய்தல், செயற்றிறனை சேமித்துப் பாரித்துப் பார்த்தல் ஆகிய பிரதான விடயங்களுடன் கீழ்க்காணும் விடயங்களும் உட்படுகின்றன.

* நிதியப் புழக்கம் – சொத்துகள்.
* நிதிய அடிப்படை அதிகாரங்கள் – பொறுப்புகளும் மூலதனமும்.
* மூலதனம்

மேற்கூறிய அங்கத்துவ விளக்கம், வருடாந்த விருத்தியை நிச்சயப்படுத்திக் கொள்வதற்கு ஆதாரமாக அமையும். உதாரணமாக 50,000 முழு அங்கத்தவர்களுள் 1,500 பேர் மாத்திரம் சேவைகளைப் பெற்றுக்கொள்கின்றனர்களாயின் அவ்வாறு நிகழ்வதற்கான காரணத்தை வினவுதல் வேண்டும். அவ்வளவு பெருந்தொகையான அங்கத்தவர்கள் செயற்படாதிருப்பதற்கான காரணங்கள் யாவை அவ்வாறு நிகழக் காரணம் சிககூ சங்கம் அங்கத்தவர்களின் தேவைகளை நிறைவேற்றுமையா? அவ்வாறில்லாவிடின் அங்கத்தவர்கள் அப் பிரதேசத்தை விட்டு நீங்கிச் சென்றுள்ளனரா? இல்லாவிடின், அங்கத்தவர்கள் வயது கடந்தவர்களாக இருப்பதனல் கடன் பெறத் தேவையற் படவில்லையா? குடிமக்களுள் பெரும்பாலானோர் தொழிலாளர்களாக இருக்கக் கூடும், அவ்வாறில்லாவிடின் சிககூ சங்கம் சந்தைப்படுத்தலையும் சேவைகளையும் வழங்குவதையும் சிறப்பாகச் செய்திருக்கலாம்.

மேற்கூறிய நிதி விளககத்தைத் தொடர்ந்தும் விளக்குவதற்காயின் நிதியடிபபடை ஆதாரங்கள், நிதியததைப் புழங்குதல், சமபாதிததல் போன்ற சிககூ சங்கமொன்றின் வரலாற்றுச் சிறபபுமிக்க அறிக்கையொனறை எடுத்துக் காட்ட முடியும. நிதி விளக்கத்தின் மூலம, நிதியததை பெற்றுக்கொள்ளும் விதத்தையும் அதனைப் பயன்படுத்தும் விதத்தையும் தீர்மானிக்க முடியும.

ஏதேனுமொரு காலஎல்லைக்குள், சிககூ சங்கமொனறின்

(5ம் பக்கம் பார்க்க)

# சிகசூ சிரமதானம் மூலம் "விஜயா ரெயிலர் வீதி"

அண்மையில் கல்முனை மாவட்ட சேனைக்குடியிருப்பு சி.க.கூ. சங்க அங்கத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டு, பொது மக்களினதும், அங்கத்தவரினதும் சிரமதானம் மூலம் செப்பனிடப்பட்டு ''விஜயா ரெயிலர்'' வீதி அமைக்கப்பட்டது. இவ்வீதி அமைப்பு வைபவத்திற்கு கல்முனை மாவட்ட சமாச உபதலைவர் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இச் சங்கமானது ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வருடத்தை எட்டியுள்ளதுடன் 35 அங்கத்தவர்களைக்கொண்டது. அண்மையில் இச்சங்கக் காரியாலயமும் இம் மாவட்ட சமாச உபதலைவரால் திறந்து வைக்கப்பட்டது. இங்கு தொண்டர்களே பணிபுரிந்து வருகின்றனர்.

சுயதொழில், வீடமைப்பு போன்ற தேவைகளுக்கு இச் சங்கம் கடன்வசதிகளையும் வழங்குதல் குறிப்பிடத்தக்கது.



கல்முனை, சேனைக்குடியிருப்பு சிககூ காரியாலயத்தை மாவட்ட சமாச உபதலைவர் திரு வி. சண்முகம் திறந்து வைக்கிறுர்



சிரமதானத்தில் பங்கேற்றவர்களில் பங்கேற்றவர்களையும் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட திரு. வி. சண்முகம் அவர்களையும் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய புள்ளி . . .

(4ம் பக்கத் தொடர்)

பொதுவாக ஓராண்டின் பொருட்டான நிதிக் கூற்றையும் அதற்கு முக்கிய ஆண்டின் நிதிக் கூற்றையும் ஒப்பிட்டுப் பார்க்கும் விதத்திற்குச் சொல் விளக்கமளித்தல் நிதிய விளக்கமாகும்.

சிககூ சங்கங்கள் சுய உதவி நிதிக் கூட்டுறவு வர்க்கங்களாகும் (இனங்களாகும்) அங்கத்தவர்கள் தமது சேமிப்புக்களை வைப்பிலிடுவர். சேமிப்பு விருத்தியை கவனிப்பதற்காக முழுச் சேமிப்புத் தொகையையும் ஓர் அங்கத்தவரின் முழுச் சேமிப்புத் தொகையுட்பட சேமிப்பு விருத்திப் போக்கையும் சோதித்துப்பார்க்கவேண்டும். சிககூ சங்கத்தின் மற்றுமொரு மிக முக்கிய பணியாதெனில் புது அங்கத்தவர் கட்கு கடன் வழங்குவதற்கும் அங்கத்தவர்கட்கு வழங்கப்படுகின்ற சம்பூர்ணக் கடன் தொகைக்கு மேலதிகமாக வழங்கப்படும் கடன் தொகையையும் சங்கம் பதிவு செய்து கொள்ளும். கடன் தொகையையும் கடன்களின் எண்ணிக்கையையும் கடனின் வர்க்கத்திற்கு இணங்க விளக்கலாம்.

வழங்கப்படுகின்ற கடன் வர்க்கம் தொடர்பான அறிக்கைகளை பேணி வருவதனால், அங்கத்தவர்களின் பொருளாதாரச் செயற்பாடுகள், அவர்களது கடன் தேவைகள், சிககூ சங்கத்தின் கடன் பிரிவு என்பவற்றை பல அம்சங்களாகப் விழிக்கக் கூடிய ஒரு படத்தை சித்திரிக்க முடியும்.

சிககூ சங்கங்கள் இயங்கி வருகின்ற விதம் சிக்கலானதல்ல. நிதியைச் சேமிக்கும நோக்குடனும் நியாயமான ஒரு வட்டியை அறவிட்டு ஒருவருககொருவர் கடனை வழங்குவதற்காகவும் மக்கள் குழுககளை ஒனறு திரட்டுகின்றனர் கடனுக்கான வட்டியாகக் கிடைக்கப் பெறுகின்ற தொகையிலிருந்து செலவைக் கழித்த பின கிடைக்கும் பணம் சிககூ சங்கத்தின வருமானம் ஆகும். பஙகு இலாபம் வழங்குவதற்காகவும் ஒதுககீடுகளை கட்டி எழுப்புவதற்காகவும், வருமானத்தை பெற்றுக் கொளள வேண்டும். அவ்வாறு செய்யாது விடின் சிககூ சங்கம் நிலைக்க முடியாது.

## மக்கள் கூட்டுறவும், போட்டியாளர்களும்

வெளிவாரிச் சூழலைச் அறிந்து வளங்கக் கொண்டபடியால் போட்டிச்சநதையில நிலைத்து வாழ்வதறகு அத்தியாவசியப்படுகினற மாறறஙகளுககுய, அபிவிருத்திககுய ஈடுகொடுக்கக் கூடியதாக சிககூ சங்கஙகள் இருக்கின்றன. வெளிவாரிச் சுற்றூடலில் போட்டியும், சிககூ சங்கத்தின் அங்கத்தவர் கூட்டம உள்ளடங்குகினற மககள் கூட்டத்தையும, போட்டியாளர்களையும சோதித்துப் பார்ப்பதன மூலம் வழங்க வேண்டிய சேவைகள யாவை எனச் சிறப்பாகப் புரிந்து கொள்ள முடியும்.

மக்கள் மட்டத்தில்இன்னும் யாருக்குச் சேவையாற்ற வேண்டும்? சிககூ சங்கத்தின் எதிர்கால அங்கத்தவர்களாக யாரை நிச்சயப்படுத்திக் கொள்வது? இவற்றை அறியதற்காக உதாரணமாக குடியேற்ற மக்கள் வாழ்கின்ற ஒரு பிரதேசத்தில் செயற்பட்டு வருகின்ற ஒரு சிககூ சங்கத்தின் பிரதேசத்தில் வாழ்ந்து வரும் குடியேற்றக் காரர்களின் எண்ணிக்கைகளை அறிந்து கொள்ளல் அவசியமாகும்.

அனேகமான பிரதேசங்களில் சிறப்பாகக் கிராமப் புறங்களில் காணப்படுகின்ற ஒரேயொரு நிதி நிறுவனம் சிககூ நிறுவனமாகும். இப்படிப்பட்ட பகுதிகளில், கடன் வழங்குவோர், அல்லது சேமிப்பு சமூகம் போன்ற ஒழுங்கு நிலையில் இல்லாத நிறுவனங்களோடு தான் போட்டி ஆரம்பமாகும் நகர்ப் புறங்களில் இதர நிதி நிறுவனங்களோடு போட்டி போட வேண்டி ஏற்படலாம். தமது போட்டியாளர்கள் யார்? அவர்கள் கடனுக்கு அறவிடும் வட்டி வீதம் யாது? வைப்புகளுக்கு வழங்கப்படும் வட்டி வீதம் யாது? ஆகிய கேள்விகளுக்கான பதில்களை சிககூ சங்கம் அறிந்திருத்தல் அத்தியாவசியம் ஆகும். இந்நோக்கத்திற்காக புள்ளி விபரங்களே தேவைப்படுகின்றன.

ஒரு தேசிய அமைப்பின், சமாசத்தின் அல்லது சம்மேளனத்தின் நோக்கம் யாதெனில் தொடர்புறுகின்ற சங்கங்களுக்கும் சேவை செய்வதாகும். இப்பகுதியை நிறைவேற்றிக் கொள்வதற்காக சம்மேளனம் தொடர்புடைய அதே போன்று தொடர்பற்றவர்களிடமிருந்து அடிப்படைத் தரவுகளை திரட்டி வருகின்றது. இதன்படி (சமபல உணவு என அறிமுகப் படுத்தப்படுகின்ற) தகவல்களைத தேசிய மட்டத்தில் திரட்டுதல் சிககூ சங்கங்களின அங்கத்துவத் தரவுகள் நிதியத் தரவுகள் என்பவற்றை ஆதாரமாக கொண்டே நிகழ்கின்றது.

சம்மேளன மட்டத்தில் அங்கத்துவ சிககூ சங்கங்கள் தொடர்பாக பேணப்பட்டு வருகின்ற தரவுகள்

* சிககூ சங்கத்தின் பெயர்
* ஆரம்பித்த திகதியும் தொடர்புடைய விடயங்களும்
* நிறுவப்பட்டுள்ள இடம் பொதுப்பிணைபபுய வர்க்கமுய (இனம்)

என்பவை உள்ளடங்குகின்றன. இத் தகவல்கள் இயககத்தின வயதையுய, அவைவையும மதிப்பீடு செய்வதற்கு உதவியாக அமைகின்றன.

## சம்பாதிப்பும், செலவும், மேலதிகமும்

சிககூ சம்மேளனத்துடன் இணைந்த சிககூ சங்கங்கள் தொடர்பான தரவுகளைப் பேணி வருகின்ற பொழுது, சம்மேளனததினல் மேற்கொள்ளப்படுகின்ற அடுத்த நடவடிக்கை என்னவெனில் சிககூ சங்க புள்ளி விபரத் தகவல்களுடன் தொடர்புடைய சம்பாதிப்புகள் செலவுகள், மேலதிகங்கள் ஆகிய தகவல்களை ஒருங்கிணைத்தல் ஆகும். இவை அனைத்தையும் ஒருங்கிணைப்பதற்கு சம்மேளனத்திற்கு வசதியில்லாவிடின்,

* சிககூ சங்க எண்ணிக்கை
* அங்கத்துவ எண்ணிக்கை
* சேமிப்பு பழக்கம்
* நிலுவைக் கடன்
* ஒதுக்கீடுகள்
* சொத்துக்கள்
  வருமானம், செலவுகள், பணம செலுத்தப்படாமல் (கடமையிற் தவறியுள்ள) நிலுவைப் பணம்.

ஆகிய தகவல்களையாவது குறைந்தபட்சம் ஒருங்கிணைத்தல் வேண்டும். இத் தகவல்கள் அனைத்தையும் திரட்டுவதன் மூலம் தேசிய சிககூ இயக்கததின நிதி ரீதியான சகதி (நிலைப்பாடு) தொடர்பான பொதுக் கணிப்பைப் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்புக்கள் கிடைக்கப் பெறுகின்றன.

சிககூ சங்க ஸ்தாபனத்தின் பிரதான பிரிவுகள் தொடர்பான புள்ளி விபரங்களைத் தயாரிப்பதற்காக சிககூ சங்கங்களின் சம்பூர்ணமான புள்ளி விவரப் பதிவுகளைப் பகுதிபகுதியாகப் பிரிப்பதற்குச் சம்மேளனத்திற்கு சந்தாப்பம கிடைக்கின்றது.

## புள்ளி விபரங்களின் பிரயோசனங்கள்

திட்டமிடல் முகாமைத்துவத்தின் ஆரம்பப் பணியாக அமைவதுடன், சிககூ சங்கங்களினல் அங்கத்துவத் தேவைகள் நிறைவேற்றப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவதற்காக நோக்கங்களை விருத்தி செய்தல், செயற்படுத்தல் போன்ற செல்திசைகளை அடையாளம் காண்பதற்கு புள்ளி விபரங்கள் பெரிதும் நன்மையளிக்கின்றன. அபிவிருத்தி இலக்க சந்தைப் பங்கு வீதம் நிதிச் செயற்றிறன் காட்டிகள் போன்ற விதிகளை அளவிடக் கூடிய நோக்கங்களைத் தயாரிப்பதற்காக இத் தரவுகளைப் பயனபடுத்திக் கொள்ள முடியும்.

கால அத்தியாயப்படி புள்ளி விபரங்களைத் தேடிப் பார்ப்பதன் மூலம் நோக்கங்களை நிறைவேற்றிக் கொண்டவை தொடர்பான முன்னேற்றத்தை அளவிட்டுப் பார்ககலாம். கடன் அல்லது சேமிப்பு வீதத்தை அதிகரித்தல் அல்லது சொத்துக்களிலிருந்து கிடைக்கினற வருமானததை நோககஙகளைத் தயாரிப்பதற்காக புள்ளி விபரக் காட்டிகள் உதவுகின்றன.

சேவைகளை முன்னேற்றுவதற்கு சந்தைப்படுத்தல் உதவுகின்றது. அங்கததுவர் செல்திசை போனற சங்கங்கள் தொடர்பான தரவுகள் பொருத்தமான சந்தைப்படுத்தல் முறைகளைப் பயன்படுத்திக் கொளளுதல், ஆகியவற்றிற்காக சி.க.கூ சங்கத்திற்கு புள்ளி விபரங்கள் முக்கியமாக அமைகின்றன.

பிரதான புள்ளி விபரத் தரவுகளில், பிரதேச, பிராந்திய மாவட்ட, தேசிய தரவுகளும் ஒப்பிட்டுப் பார்க்கக் கூடிய அங்கத்துவத் தகவல்களும் உள்ளடங்குகின்றன. குடிசனம் வேரூன்றியுள்ள வீதமும் ஆகும் தேசிய சந்தைப் படுத்தல் உபாய வழிகளைத் தயாரிக்கும் பொழுது சிககூ சங்கங்களின் பூகோள ரீதியான அமைப்பு முறை, அங்கத்துவம், நிதி அமைப்பு முறைகள் முன்னேற்பட்ட சந்தைப்படுத்தல் முயற்சிகளின் வெற்றி என்பவற்றை மதிப்பீடு செய்வதற்காக நிதிக்காட்டிகள் பயன்படுகினறன.

சி.க.கூ சங்கங்களினதும், சம்மேளங்களினதும் நாடுகளின் பாதுகாப்பையும் நிலைப்பாட்டையும் மதிப்பீடு செய்வதற்காக இயக்கததிற்குரிய நிதிய புள்ளி விவரங்கள் தேவைப்படுகின்றன. இதன படி பார்க்கும் பொழுது சர்வதேச சி.க.கூ திட்டத்தின் சிறப்பான வளர்ச்சியை உறுதிப்படுத்துவதற்காக புள்ளி விபரங்களை வெற்றிகரமாக பயன்படுத்த வேண்டியுள்ளது. தரவுகளைத் திரட்டுகையில் சி.க.கூ சங்க முறையின் ஒவ்வொரு மட்டமும் முடிவெடுக்கக் கூடிய பணிகளைப் புரிகினறன. மறுபுறத்தில் புள்ளி விபரங்கள், திட்டமிடல், சந்தைப்படுத்தல், கடன் தகைமை பற்றிய தெளிவாக்கல்கள் வினைத்திறன் ஆகியவற்றைக் காட்டக்கூடிய கூறுகளாகும்.

# சிககூ மகளிர் அமைப்பின் சமூகச் செயற்பாடுகள்

வி. எல். எம். ஹப்பு ஆராச்சி
தலைவி;தேசிய மகளிர் அமைப்பு.
தமிழில் : செல்வி. எம். எம். ரஜனி

1940 ஆம் ஆண்டின் பின்னர் செயலற்று இருந்த சி.க.கூ. இயக்கம் 1978லிருந்து புதுத் தலைமைத்துவத்தின் கீழ், புத்தெழுச்சி பெற்று கிராமங்கள் தோறும் கிளைகளை வளரச் செய்து முழு நாட்டுக்கும் நிழல் தருகின்ற மா பெரும் மரமாக இருந்து வருகின்றது. இன்று சி. க. கூ. சர்வதேச மட்டம் வரை பரந்து விரிவடைந்துள்ள நிலையான அசையாத அமைப்பாகும். கிராம மக்களின் நன்மைக்காக சி.க.கூ. என்னும் மரத்திலிருந்து அறிமுகப்படுத்தப்படுகின்ற புதுக் கிளைகளுடன் இணைந்த ஓர் இளமையான பிரிவே மகளிர் அமைப்பாகும்.

1929 ஆம் ஆண்டளவில் சிக்கனத்தை அடிப்படையாகக் கொண்டு பிறந்த மாதர் அமைப்பின் பங்களிப்பு தொடர்பான ஒரு சிறு குறிப்பு மாத்திரம் சி.க.கூ. வரலாற்றில் காணப்படுகின்றன. சி.க.கூ. இயக்கத்தில் ஒரு மீளுயிர்ப்பித்தல் ஏற்பட்டாலும் 1983 ம் ஆண்டு வரை மகளீர் அமைப்புகள் தொடர்பான கவனம் செலுத்தப்படவில்லை அன்று வரை பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப் பட்டிருந்த மகளிர் குழுக்கள் 1983 ஜனவரி மாதமளவில் சி.க.கூ சங்கங்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டன. ஆரம்பத்தில் பெரும் வளர்ச்சியை கண்ட இப்புதுக் கருத்தியல் அவ் வேகத்திலேயே முதலாம், இரண்டாம் ஆண்டுகளுக்குள் அவ்வளர்ச்சியை இழந்து விட்டது.

அதற்குப் பல காரணங்கள் உள.

* குறிப்பான ஓர் நோக்கமும், ஏற்பாடு செய்யப் பட்ட ஓர் ஒழுங்கான வேலைத் திட்டமும் இல்லாதிருந்தமை.
* முன்னோடிகள் இல்லாதிருந்தமை.
* நிதி வசதிகள் இல்லாதிருந்தமை.
* அங்கத்தவர்களின் வயதுகளுக்கு மத்தியில் பெரும் இடைவெளி காணப்பட்டமை.
* கௌரவ பணிப்பாளர் சபைக்கும் மகளீர் குழுக்களுக்குமிடையில் தொடர்பிருக்காமை.

ஆகிய காரணங்களின் அடிப்படையிலும் சங்கங்களுக்குரிய மற்றும் காரணங்களின் அடிப்படையிலும் தற்காலிகமாக பின் சாய வேண்டியேற்பட்டது. மகளீர் அமைப்பினை மறுசீரமைக்க வேண்டியதன் அவசியம் தெளிவாகத் தெரிய வந்தது. மகளீர் குழுக்களின் இந்நிலை மாவட்ட தலைவிகளின் வாயிலாக சம்மேளனத்தின் கவனத்திற்கு எடுக்கப் பட்டது. உடனே இயங்கிய சகல மகளீர் தலைவிகளையும் கேகாலை கரண்டுபொன பயிற்சி ஆய்வு நிலையத்திற்கு நிலையத்திற்கு அழைத்து 1987ம் ஆண்டு மார்ச் 29, 30ம் திகதிகளில் மகளீர் குழுக்கள் தொடர்பான மீளாய்வொன்றை செய்து திரட்

(6ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிகசூ . . .

(5ம் பக்கத் தொடர்)

டப்பட்ட விடயங்களைக் கவனத்திற் செலுத்தி நாட்டின் சகல மகளீர் குழுக்களையும் ஒன்று திரட்டும் நோக்குடன் இயங்கையை முழுத் தொழிற்படு பரப்பெல்லையாகக் கொண்டு அமையுமாறு இலங்கை சி. க. கூ இயக்கத்தின் மகளீர் சிறுவர் ஆகியோரின் பங்களிப்பை பரவலடையச் செய்வதற்காகவும் அவர்களது வாழ்க்கை நிலையை மேம்படச் செய்வதற்காகவும் சமூக பொருளாதார ஆத்மீக கலாச்சார நிலைகளை உயர்த்தும் நோக்குடன் சி.க.கூ. இயக்கத்தின் விசாலிப்பை சக்தி பெறச் செய்வதற்கு ஒத்துழைப்பு நல்குவதற்கும் ஆலோசனைச் சபையாகப் பணியாற்றுவதற்கும்

1 ஆரம்ப சங்க மட்டம்
2 பிராந்திய மட்டம் (உ.அ.அ பிரிவு)
3 மாவட்ட சங்க மட்டம்
4 தேசிய மகளீர் மடடம் (அமைப்பு)

ஆகிய 4 மட்டங்களையும் கொண்ட மகளீர் அமைப்புகள் நிறுவப்பட்டன. சம்மேளனத்தின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்ற பின்னர் மகளீர் குழுக்களை துணை வீதத் தொகுதியும தாரிக கப்பட்டது.

தெளிவான நோக்கங்களின்றி சரியும் நிலையினை அடைந்திருந்த மகளீர் குழுக்கள் புத்துயிர் பெற்று தனது எதிர்காலப் பணிகளை திட்டமிட்டுச் செயற்படுத்தும் பணிகளில் ஈடுபட்டுள்ளது.

1987ம் ஆண்டு பங்குனி மாதம் தொடக்கம் தேசிய மகளீர் அமைப்பின் நிறைவேற்றுக் குழு சம்மேளனத்தின் பாதுகாப்பின் கீழ மாதந்தோறும் வளர்ச்சி முன்னேற்றத்தை மீளாய்வு செய்து கொண்டு கல்விக் கருத்தரங்குகளை நடத்தி குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொண்டு அங்கத்தவர்களின் மேம்பாட்டிற்காக நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இச் செயற்பாட்டினைச் சூழ்ந்து சி.க.கூ. மகளீர் அமைப்புடன் இணைகின்ற மகளீரின் நோக்கங்களும் மகளீரின் தன் முயற்சிகளும் எதிர்வரும் இதழில் பிரசுரிக் கப்படும்;

# நுவரெலியா தோட்டப் பகுதிக்கு இரண்டு உத்தியோகத்தர்கள்

நுவரெலிய மாவட்டத்தில் தோட்டப்பகுதியில் சிகசூ சங்கங்களை அமைத்தல், அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடல் போன்ற கடமைகளைச் செய்வதற்காக நுவரெலிய சிகசூ மாவட்ட சமாசம் இரண்டு வெளிக்கள உத்தியோகத்தர்களை நியமித்துள்ளது.

# அறுபது பேருக்கு ரூபா அறுபத்திநாலாயிரம்!

மாத்தளை மாவட்ட தோட்டப் பகுதியில் உருவாக்கப்பட்டுள்ள சிகசூ சங்கங்கள் தமது சேமிப்பு பணத்தைக் கொண்டு அங்கத்தவர்களுக்கு கடன் வாய்ப்புக்களைச் செய்து வருவதாக அறியப்படுகிறது. இச் செயற்பாடானது தோட்டப் பகுதியில் அமைந்துள்ள சிகசூ சங்கங்களுக்கு முன் மாதிரியான செயற்பாடெனலாம்.

உன்னஸ்கிரிய யு. எம். ஒ. ஆலயமணி சிகசூ சங்கம், பிட்டக்கந்த ஆகிய சங்கங்கள் தமது சொந்தப் பணத்திலிருந்து அங்கத்தவர்கட்கு ரூபா 64 000/- கடன் வழங்கியிருப்பதாக தெரிய வருகிறது.

### தேசிய கூட்டுறவு சபையின் தலைவராக திரு. பீ. ஏ. கிரிந்தெனிவ அவர்கள்

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற ஸ்ரீ லங்கா தேசிய கூட்டுறவு சபையின் பொதுச்சபைக் கூட்டத்தில் தேசிய கூட்டுறவு சபையின் தலைவராக திரு. பீ. ஏ. கிரிவந்தெனிய தெரிவு செய்யப்பட்டுளார். இலங்கை சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களின் தலைவராகவும், ஆசிய கடனுதவு சமாச தலைவராகவும் திரு பீ ஏ. கிரிவந்தெனிய கடமையாற்றுகிறார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

### ஆரம்ப பாடசாலை ஆசிரியர்கட்கு பயிற்சி

மாத்தளை மாவட்ட தோட்டப் பகுதிகளில் சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்கள் அமைந்துள்ள இடங்களில் ஆரம்ப பாடசாலைகள் அமைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கு முன்னேற்பாடாக ஆரம்ப பாடசாலைகளில் கற்பிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதுடன் தெரிவுசெய்யப்படும் ஆசிரியைகளுக்கு பயிற்சியளிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கு ''போறூட்'' நிறுவனம் இலங்கை சிகசூ சம்மேளனம் ஊடாக நிதி உதவி அளிக்கவுள்ளது.

### கண்டி மாவட்ட தோட்டப் பகுதியில் புதிய சங்கங்கள்

கண்டி மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்க சமாசம் தோட்டப் பகுதியில் சங்கங்களை அமைப்பதில் கூடிய கவனம் செலுத்தி வருகின்றது. சமாசத்தின் தோட்டப்பகுதிக்கான மாற்று முகவராகக் கடமையாற்றிவரும் திரு. அன்டன் அவர்களின் முயற்சியால் அண்மையில் இரண்டு புதிய சங்கங்கள் மடுல்கலப் பகுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது, எதிர்காலத்தில் இப் பகுதிகளில் கூடுதலான சங்கங்கள் உருவாக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் உருவாகி வருவதை அவதானிக்கக் கூடியதாயுள்ளது.

# மட்டக்களப்பு மாவட்ட உதவிச்செயலாளர்கட்கான - பயிற்சி வகுப்பு -

மட்டக்களப்பு மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் நியமிக்கப்பட்ட உதவிச் செயலாளர்கட்கான பயிற்சிவகுப்பு கடந்த ஆனி மாதம் சிகசூ பிரதேச நிலையத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. அமிர்தலிங்கம், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பயிறசி வகுப்பை ஆரம்பித்து வைத்தார். மங்கள தீபமேற்றல் நிகழ்ச்சியுடன் துவக்கி வைக்கப்பட்ட இப்பயிற்சி வகுப்பில் விசேட விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட புனர்வாழ்வுத் திட்ட பணிப்பாளரும், கச்சேரி உதவித் திட்டமிடல் பணிப்பாளருமான திரு வி. எஸ். சுவாமிநாதன், கிளிநொச்சி கச்சேரி பிரதம தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஏழு நாட்கள் தொடர்ந்து நடைபெற்ற உதவிச் செயலாளர் பயிற்சி வகுப்பில், சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்க வரலாறு, அமைப்பு, சங்க, சமாச நடவடிக்கைகள், துணைவிதி, கூட்டுறவுச் சட்டம், திட்டமிடல் போன்றவை பற்றிய விரிவுரைகள் இடம் பெற்றன.

பிரதேச நிலையப் பணிப்பாளர் திரு. எஸ். இராஜரெட்ணம் தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சி வகுப்பில் பிரதேச நிலைய உபதலைவர் திரு. ஏ. எஸ். முருகேசு, கிளிநொச்சி கச்சேரி புனர்வாழ்வுத் திட்டப் பணிப்பாளர் திரு. வி. எஸ் சுவாமிநாதன், கச்சேரி திட்ட நிறைவேற்று உத்தியோகத்தர் திருமதி. இராமச்சந்திரன்; மன்னார் மாவட்ட சமாசச் செயலாளர் செல்வி கிரிஜா தர்மராஜன் ஆகியோர் விரிவுரையாளர்களாக கலந்து கொண்டனர்.

# சிகசூ அமைப்பினது 1994ம் ஆண்டிற்கான தேசிய இலக்கு

* சங்க எண்ணிக்கை இரண்டு கிராமங்களுக்கு ஒரு சங்கம் விகிதம் 12,000 சங்கம்.
* அங்கத்தவர் அதிகரிப்பு 56 00000 - 1.6 மில்லியன் வரை.
* முழு இலங்கையிலுமுள்ள குடும்பங்களில் 30% அமைப்பினுள் வரல்.
* அங்கத்தவர் அதிகரிப்பு குறைந்து பின்வரும் வீதமாதல் இருத்தல் வேண்டும்.
* இளையோர் அதிகரிப்பு 20%
* மகளீர் அதிகரிப்பு 20%
* வறியோர் 10%

வைப்பு:-
* ஒரு சங்கத்தின் அங்கத்தவர் வைப்பு 65,000-120000 வரை
* ஒரு குடும்பத்தின் சேமிப்பு சாதாரணமாக ரூ 680 -1200 வரை

கடன்:-
* ஒரு சங்கம் வருடாந்தம் வழங்கும் கடன் ரூ 100000-200000 வரை.
* ஒரு அங்கத்தவருக்கு வருடாந்தம் வழங்கும் கடன் 1000-3000 வரை.

### சிகசூ அமைப்பின் நிறுவன ரீதியான அமைப்புமுறை

* 1400 கொத்தணி அமைப்புக்களை உருவாக்கல்.
* உ. அ அதிபர் பிரிவுகளில் 280 கிளைகள் அமைப்பதும் மாவட்ட சமாச நடவடிக்கைகள், அதிகாரங்களைப் பரவலாக்கலும்.
* சிகசூ சம்மேளனத்தின் நடவடிக்கைகளைப் பரவலாக்கலும் 9 பிரதேச அலுவலகங்களை நடைமுறைப்படுத்தலும்.
* தேசிய, சர்வதேச ரீதியில் மானிட ஆற்றலை பற்றிய பயிற்சி நிலையமொன்றை அமைத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உத்தியோகத்தர்கள்

## இராமநாதபுரம் சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கம்

கிளிநொச்சி.

தலைவர்:- திருமதி செல்வரத்தினம் தவமணி.
செயலாளர்:- திருமதி செல்வராசா யோகராணி.
பொருளாளர்: திருமதி இராசலிங்கம் தங்கேஸ்வரி.

நிர்வாக உறுப்பினர்கள்.

துரைசிங்கம் திருமகள்
ஐயாத்துரை இந்திராணி
இம்மானுவல் நீற்ரூ
குலேந்திரன் மேரி கிறிஸ்ரின்

## வளர்மதி சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கம்

தலைவர்:- திரு. இ. சுந்தரமூர்த்தி
உபதலைவர்:- திரு. ம. பத்மநாதன்
செயலாளர்:- திரு. க. பேரின்பநாயகம்
பொருளாளர்:- திரு. ச. தருமலிங்கம்

நிர்வாக உறுப்பினர்கள்:-

திரு. சி. சோமபாலன்
திரு. வே. கணபதி
செல்வி த. அன்பழகி
திருமதி இ. சரசலட்சுமி
திரு. வே. சித்திரவடிவேல்

## உடுத்துறை சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கம்

கிளிநொச்சி.

தலைவர்:- திரு. வே. இராசையா.
உபதலைவர்:- திருமதி ஐ. அரியமலர்.
செயலாளர்:- திரு. வே. வேலாயுதம்பிள்ளை.
பொருளாளர்:- திரு. க. சிற்றம்பலம்.

நிர்வாக உறுப்பினர்கள்

திரு. கா. கந்தசாமி.
திரு. வே. செல்வநாயகம்.
திருமதி சு. மகேஸ்வரி.

## மட்டக்களப்பு மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களின் சமாச உதவிச் செயலாளர்கள்

| | | |
|---|---|---|
| திரு. எஸ். ஹரிகரன்:- | கோறளைப்பற்று | உ. அ. அ. பிரிவு |
| திரு. எம். தவனேஸ்வரன்:- | ஏருவூர்பற்று | ,, |
| செல்வி ஆர். கருணைலக்சுமி:- | மண்முனை வடக்கு | ,, |
| ஜனப் எம். எம். ஹசன் அலி:- | காத்தான்குடி | ,, |
| திரு. ஏ. கங்காதரன்:- | மண்முனை | ,, |
| திரு. ஆர். இராஜகோபால்:- | களுவாஞ்சிக்குடி | ,, |
| திரு. ரி. மகேந்திரன்:- | வெல்லாவெளி | ,, |
| திரு. ரி. அமிர்தலிங்கம்:- | பட்டிப்பளை | ,, |
| திரு. எம். ஜெயநாயகம்:- | மண்முனை மேற்கு | ,, |

# "வறுமையில் வாடும் என் வாழ்க்கையிலே"

சென்ற கிழமை அதாவது 6.07.89 அன்று டேவிட் என்பவரை சந்தித்தேன். அவர் முன்பு மதுபானம் அருந்துபவராகவும் தீய வழியிலே செல்பவராகவும் காணப்பட்டார். திடீரென அவரின் வாழ்க்கையிலே ஒரு மாறுதலை தற்போது காணக் கூடியதாக இருந்தது. தீய வழியை கைவிட்டு விட்டார். இதற்கு என்ன காரணம் என்று கேட்க அதற்கு அவர் பின்வருமாறு கூறுகின்றார்.

எனக்கு இப்போது வயது நாற்பது (40) நான் முப்பது (30) வயதில் இருந்து மது பானம் அருந்தி வந்தேன். இதற்கு காரணம் நான் என் சொந்த ஊரான நுவரேலியாவில் இருந்து ஓமந்தைப் பக்கத்திற்கு வெளியேறிய பின்பு அங்கு போக முடியாமையும், இதனால் பல நண்பர்களுடன் சேர்ந்தே தீய வழியில் இறங்கினேன். ஒரு சில வருடங்களின் பின்பு நான் திருமணம் செய்து கொண்டேன். அப்போது கூட நான் மதுபானத்திற்கு அடிமையாகவே இருந்தேன். எனக்கு முறையே இரண்டு பெண் பிள்ளைகளும், இரண்டு ஆண் பிள்ளைகளும் பிறந்தன. இதற்கு பின்பு நான் சிறிது சிறிதாக திருந்த ஆரம்பித்து விட்டேன். இப்படியாக நான் மதுபான அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டேன். பின்பு தண்ணிரூற்றுக்கு வந்தேன். அங்கே நான் நாட்சம்பளத்திற்கு கூலி வேலை செய்கின்றேன் என்றார் டேவிட். பின்பு நான் ''நீங்கள் இப்படி திருந்துவதற்கு காரணம் என்ன''? என்று கேட்டேன். அதற்கு திரு. டேவிட், என்னுடைய வறுமையின்வாழ்க்கையிலே... சிக்கனமாக நடந்து கொண்டால்தான் என்னுடைய பிள்ளைகளின் எதிர்காலத்தை நிர்ணயிக்க முடியும். அத்தோடு என்னுடைய பிள்ளைகளைப் படிப்பிக்க வேண்டும். எனவே நான் சிக்கனத்துடன் வாழ வேண்டுமென எண்ணினேன்'' நன்றி திரு. டேவிட் அவர்களே... என்னுடைய கேள்விகட்கு அமைதியாக பதில்கூறியமைக்கு மிகமிக நன்றி.என்று கூறி விடை பெற்றேன்.

என்னுடைய வாழ்க்கை இப்படி ஒரு மாறுதலை தற்போது தான் கண்டு கொண்டேன்.

திரு. க. இராஜேந்திரன்.
பாடசாலை வீதி.
வற்றுப்பளை.

## நியமனம்

மட்டக்களப்பு மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களின் சமாச நிதி உத்தியோகத்தராக திரு. கே ஜெகநாதன் நியமனம் செய்யப்பட்டுள்ளார். யாழ்ப்பாண பல்கலைக் கழக வர்த்தக முகாமைத்துவ பட்டதாரியான திரு. கே. ஜெகநாதன் சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்க பிரதேச நிலையத்தில் நிதி முகாமைத்துவ பயிற்சி பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## வலது கை கொடுப்பது இடது கைக்குத் தெரியுமா?

1. கண்ணீரில் இருக்கின்றேன் நான்
கவலையில் மிதக்கின்றேன் நான்
வலது கை கொடுப்பது இடது கை அறியுமோ
அது உனக்கு தெரியுமா?
வலது கை கொடுப்பது இடது கை அறியுமோ,
அது உனக்கு புரியுமா?
(கண்ணீர்)

2. கர்த்தரே என் ஜெபத்தைக் கேளுமே
என் ஆவி தயங்குதே
என் கையை உமக்கு நேராகத் தருகிறேன்
என்னை வழிநடத்துமே
(கண்ணீர்)

3. ஆழங்களில் இருந்து கூப்பிடும்
என் சத்தத்தைக் கேளுமே
அங்கேயும் உம் கை என்னை என்றும்
என்றும் வழி நடத்துமே
(கண்ணீர்)

## தன்னிறைவு சமுதாயமாகி நிற்போம்

நம்மிடையே தோன்றியிருக்க வேண்டியது
ஒற்றுமையே - ஆனால்
நமக்குள் முளைத்த சுயநலம் எனும் களையாலே
''ஓ'' என்பது ''வே'' யாகி
பலம் இழந்து, மானம் இழந்து தவிக்கின்றோம்.
நாம் இப்போது தனித்த ஒரு
அடம்பன் கொடி, நாம் இழந்த ''ஓ'' வை
என்று ''வோ'' யிருக்கும்
இடத்திற்கு மாற்றுவோமோ அன்று தான்
திரண்ட அடம்பன் கொடிபோல் – நாம்
மிடுக்காக ஆல் போல் வளர்ந்து அறுகு போல்
தளைத்து நிலையாக செயலிலே தெளிவு காட்டி
ஒற்றுமையின் பலத்தாலே தன்னிறைவுச்
சமுதாயமாகி நிற்போம்!

## நல்ல முத்துக்கள்

''தெளிவு எந்நிலையிலும் அவசியமேயாகும். உங்கள் வீட்டிற்குப் போவதற்கான வழி தெளிவில்லாமலிருந்தால் குழப்பமடைய வேண்டிவரும் உங்களுடைய உணர்வுகள் பற்றிய தெளிவு உங்களுக்கு இல்லாமலிருந்தால், சுய முரண்பாடு எழும் உங்களது சிந்தனைப் போக்கை உங்களாற் சரியாக விளங்கிக் கொள்ள முடியாவிட்டால், அந்தத் தெளிவின்மை மாயைக்குள் கொண்டுவந்து விடும்''

''நீங்கள் உங்களைக் கண்டுபிடிப்பதற்கு உறவுகளே கண்ணாடி''

''தனிப்பட்ட ஒருவரது பிரச்சினையே உலகப் பிரச்சினை''

''சுதந்திரம் பற்றி ஒருவர் எவ்வளவு தான் பேசிக்கொண்டாலும் எண்ணமானது ஒரு போதும் சுதந்திரமாக இருப்பதில்லை, எந்த நிலையிலும் எண்ணம் இருக்க முடியாது''

எந்த வகையான மனக் குழப்பமுமில்லாத இடத்தில் தான் ஒழுக்கத்தின் பண்பு இருக்கும். அதுவே ஒழுக்கமாகும்.

– விழிப்புணர்வு பற்றிய விளக்கங்கள்'' புத்தகத்திலிருந்து தொகுப்பு;-

– பிரசன்னா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாணயம்

ஆவணி-புரட்டாதி 1989
மலர் : 3
இதழ் : 3
விலை : ரூ: 2/-


# சர்வதேச கூட்டுறவு ஒன்றிய ஆசியாக் கண்ட நிதி உப குழுவின் உபதலைவர் பதவி இலங்கைக்கு

சர்வதேச கூட்டுறவு ஒன்றியத்தின் ஆசியக் கண்ட நிதி உபகுழுவின் உப தலைவராக இலங்கை சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களின் சம்மேளன பொதுமுகாமையாளர் திரு. ரஞ்சித் ஹெட்டியாராச்சி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வைகாசி மாதம் 16,17ம் திகதிகளில் கொறியாவில் சியோல் நகரத்தில் நடைபெற்ற சர்வதேச கூட்டுறவு ஒன்றியத்தின் ஆசியாக் கண்ட உபகுழுக் கூட்டத்தில் நிதி உபகுழுப் பிரதிநிதிகளாக இலங்கை, இந்தியா, மலேஷியா, ஜப்பான் ஆகிய நாடுகள் தெரிவு செய்யப்பட்டன. இக் குழுவின் நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு இடம்பெற்ற போது இந்தியாவைச் சேர்ந்த குஜாரத் கூட்டுறவு வங்கியின் பொது முகாமையாளர் திரு. வாஸ் தலைவராகவும், இலங்கை சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களின் சம்மேளன பொது முகாமையாளர் திரு. ரஞ்சித் ஹெட்டியாராச்சி உப தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

## நந்தி கற்பூரம்

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வன்னிவிளான் குளம் சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கம் ''நந்தி கறபூரத்தை'' உற்பத்தி செய்து வருகின்றது. வன்னிவிளான்குளம் சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கத்தின் பத்து யுவதிகள் இத்தொழில் முயற்சியில் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர். சங்கத்தினுடைய குறைந்த மூலதனத்துடன் ஆரம்பிககப்பட்ட இக் சற்பூரம் விற்பனை சிவபுரம சிவன்கோவில் கொடியேற்ற தினமான 30.06.1989 வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

## ஆசிய கடனுதவு . . . :

[1ம் பக்சுத் தொடர்]

மாறு.

தலைவர்:- திரு. பீ. ஏ. கிரிவந்தெனிய - இலங்கை.

உபதலைவர் I :- திரு. வீ. ஜோ. ஹோ - கொறியா.

உபதலைவர் II :- திரு. வெங் சிங்பிங் - தாய்லாந்து.

செயலாளர் : திரு. பன்யா ஸ்ரீதோஸ்சுக் - தாய்லாந்து.

பொருளாளர் :- கலாநிதி சோயிதர் மோனே - இந்தோனேஷியா.

- சணச

## வடக்கு-கிழக்கு . . .

(3ம் பக்கத்தொடர்)

பல திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருவதை யாவரும் அறிவர். இதன்படி வடக்கு கிழக்கு புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு கடன்உதவிகளைச் செய்வதற்கு நெதர்லாந்து நாட்டு ''ஹிவோஸ்'' HIVOS நிறுவனம் சிககூ சம்மேளனத்திற்கு உதவுகின்றது. நிதி முகாமைத்துவ அபிவிருத்திக்காக சமூக அபிவிருத்திக்கான அவுஸ்திரேலிய நிறுவனமும் CAA, உலக கடனுதவு சமாசமும் WOCCU, சிககூ சம்மேளனத்திற்கு உதவி வருகின்றன.

மன்னார் மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்க சமாசத்தின் நிதி முகாமைத்துவ அபிவிருத்திக்கு ''சுவிஷ் இண்டர் கோர்ப்பறேசன்'' நிறுவனத்திடம் உதவி பெறப்பட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவற்றையெல்லாம் விட எதிர்காலத்தில் மாவட்ட சமாசங்களின் நிதி முகாமைத்துவம், மற்றும் நடவடிக்கைகளை மேலும் விருத்தி செய்வதற்கு நீண்டகாலத் திட்டங்கள் இலங்கை சிககூ சம்மேளனத்தால் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

— பிரசன்னு —


## "வறிய மக்களை வாழ வைப்பதே எமது இலக்கு"

வறிய மக்களது தேவைகளையும் பிரச்சினைகளையும் இனம் கண்டு ஏற்ற பரிகாரம் காணுவதே சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கத்தின் நோக்கமாக இருக்க வேண்டும். எமது மாவட்டத்திலுள்ள பெரும்பாலான சங்கங்களைப் பார்க்கும் போது அவை அங்கத்தவர்களது குறைந்தளவு தேவையையாவது பூர்த்தி செய்ய பிரயத்தனம் செய்வதை அவதானிக்கலாம். இவ்வாறு இந்துபுரம் சென்பீற்றர் சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கத்தின் முதலாவது வருடபூர்த்தி விழாவில் விசேட விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய முல்லைத்தீவு மாவட்ட சிக்கன கடனுதவு சங்கங்களின் சமாச கௌரவ தலைவர் திரு. எஸ். சிவானந்தம் குறிப்பிட்டார்.

அண்மையில் இந்துபுரம் குழந்தை யேசு ஆலயத்தில் நடைபெற்ற சென்பீற்றர் சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்க வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் விசேட விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய திரு. எஸ். சிவானந்தம் தமது உரையில் சங்கத்தின் எதிர்கால நடவடிக்கைகள் திட்டமிட்டு செயற்படுத்தி வறிய மக்களது சமூக பொருளாதார அபிவிருத்திக்கு வழிகோல வேண்டுமென்றும் முல்லைத்தீவு மாவட்ட சமாசத்தின் இலக்கான ''வறிய மக்களை வாழவைப்பது'' என்பதற்கு சென்பீற்றர் சிககூ சங்கம் முழு ஒத்துழைப்பையும் வழங்கும் என தான் நம்புவதாகவும் குறிப்பிட்டார்.

ஐம்பதுக்கும் மேற்பட்ட அங்கத்தவர்களும் கிராம மக்களும் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் முல்லைத்தீவு மாவட்ட சமாச செயலாளர் திரு. என். திருநாமம், கிராம சேவை உத்தியோகத்தர் திரு. எஸ். அருமைநாயகம் ஆகியோரும் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினர்.

## கிளிநொச்சி சிககூ வங்கி திறப்பு விழா



அண்மையில் கிளிநொச்சி மாவட்ட சிககூ வங்கி திறந்து வைக்கப்பட்டது. பிரதேசப் பணிப்பாளர் வங்கியில் பணத்தை வைப்புச் செய்கிறுர்.

## 2000 ம் ஆண்டில் சிககூ சங்க இலக்கு

### (1) ஆரம்ப சிககூ அங்கத்துவம்

| | | | | |
|---|---|---|---|---|
| 1989 | ... | 318149 | ... | 318149 |
| 1990 | ... | 310543 | .. | 629692 |
| 1991 | ... | 388877 | ... | 1007769 |
| 1992 | ... | 429990 | ... | 1447559 |
| 1993 | ... | 474365 | ... | 1921924 |
| 1994 | ... | 522175 | ... | 2444099 |
| 1995 | ... | 578464 | ... | 3022563 |
| 1996 | ... | 636207 | ... | 3658770 |
| 1997 | ... | 704148 | ... | 4362918 |
| 1998 | ... | 769749 | ... | 5132667 |

### (2) புதிய சங்கங்கள் அமைத்தல்

| | | | | |
|---|---|---|---|---|
| 1989 | ... | 777 | ... | 777 |
| 1990 | ... | 615 | ... | 1392 |
| 1991 | ... | 649 | ... | 2041 |
| 1992 | ... | 678 | ... | 2719 |
| 1993 | ... | 747 | ... | 3466 |
| 1994 | ... | 752 | ... | 4218 |
| 1995 | ... | 826 | ... | 5044 |
| 1996 | ... | 856 | ... | 5900 |
| 1997 | ... | 937 | ... | 6837 |
| 1998 | ... | 1007 | ... | 7844 |

அமைப்பினது எதிர்கால இலக்கு பற்றிய முழுவிபரமும் அடுத்த நாணயத்தில் வெளிவரும்.

இப்பத்திரிகை இலங்கை சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனத்திற்காக இல. 201, டாம் வீதி, கொழும்பு-12இல் அமைந்துள்ள குமரன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org